பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 03 2024 **MONDAY** 7 15 **AM**

<u>வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலை ஒட்டி, பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று தெலங்கானா மற்றும் தமிழகத்தில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

2. மக்கள் நலனில் மத்திய அரசு அக்கறை காட்டவில்லை என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

3. இந்தியா – செசல்ஸ் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி செசல்ஸில் இன்று தொடங்குகிறது.

4. கடற்படை தளங்களின் தளபதிகள் பங்கேற்கும் பயிலரங்கு, புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

5. ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் போட்டியில், இந்தோனேஷியாவின் ஜொனாதன் கிறிஸ்டி பட்டம் வென்றார்.

**>>>><<<<**

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை ஒட்டி, நாடுமுழுவதும் பல்வேறு கட்சித் தலைவர்கள் பிரச்சாரம் மேற்கொள்ள தொடங்கியுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திரமோடி, இன்று காலை தெலங்கானா மாநிலம் **Jagtial-**லில் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

பின்னர், மாலை தமிழகம் வரும் அவர், கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள சாலை வாகன பிரச்சார பேரணியில் கலந்து கொள்கிறார்.

கவுண்டம்பாளையம் முதல் ஆர்.எஸ்.புரம் தபால் நிலையம் வரை சுமார் 3 கிலோமீட்டர் தொலைவிற்கு இப்பேரணி நடைபெறவுள்ளது.

இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

மக்கள் நலனில் மத்திய அரசு அக்கறை காட்டவில்லை காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற தமது நடைபயண நிறைவு நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

வேலைவாய்ப்பின்மை, வன்முறை, பணவீக்கம், விவசாயிகள் பிரச்சினை, அக்னிவீர் திட்டம் உள்ளிட்டவை ஊடகங்களில் புறக்கணிக்கப்பட்டதாக திரு. ராகுல் காந்தி தெரிவித்தார்.

>>>><<<<

இந்தியா – செசல்ஸ் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி செசல்ஸில் இன்று தொடங்குகிறது.

வரும் 27ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சியில், இந்திய ராணுவம் மற்றும் செசல்ஸ் பாதுகாப்புப் படை பிரிவிலிருந்து தலா 45 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

அமைதியை பராமரிக்கும் நடவடிக்கைகளில் பரஸ்பரம் இருநாடுகளின் செயல்பாட்டை மேம்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

இருநாட்டு ராணுவங்களுக்கு இடையே திறன், அனுபவம், சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை பரிமாறிக் கொள்ள இது உதவும் என்று கூறப்படுகிறது.

பத்து நாட்கள் நடைபெறும் இந்த கூட்டுப் பயிற்சியில், போர் குறித்த விவாதங்கள், களப் பயிற்சி, விரிவுரைகள், செயல் விளக்கங்கள் ஆகியவை இடம்பெறும் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

கடற்படை தளங்களின் தளபதிகள் பங்கேற்கும் பயிலரங்கு, புதுதில்லியில் இன்று தொடங்கி, நாளை மறுநாள்வரை நடைபெறவுள்ளது.

இதில், நூற்றுக்கும் மேற்பட்ட கடற்படை தளங்களின் தளபதிகள், பிரிவு தலைவர்கள், கட்டளை அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நாடுமுழுவதும் உள்ள கடற்படை நிலையங்களின் நிர்வாகத்தை மேம்படுத்துவது குறித்து இதில் ஆலோசிக்கப்படவுள்ளது.

கடற்படை தலைமையக அதிகாரிகள், கட்டளைப் பிரிவு தலைமையக அதிகாரிகள், கடற்படை நிலைய அதிகாரிகளின் தொழில்முறை விளக்க நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெறவுள்ளன.

கடற்படையின் பணியாளர் சேவை கட்டுப்பாட்டு அதிகாரி துணை அட்மிரல் குர் சரண்சிங் இப்பயிலரங்கிற்கு தலைமை வகிக்கிறார்.

கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் ஹரிக்குமார் தொடக்க நாள் நிகழ்ச்சியிலும், நிறைவுநாள் நிகழ்ச்சியிலும் பங்கேற்கவுள்ளார்.

>>>><<<<

நாட்டில் மதச்சார்பற்ற அரசியலை முன்வைத்து **INDI** கூட்டணி தேர்தலை சந்திக்கவிருப்பதாக திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தியின் நடைபயண நிறைவு நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நாட்டு மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள அனைத்து மாநிலங்களுக்கும் திரு. ராகுல் காந்தி பயணித்துள்ளதாக திரு. மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.

>>>><<<<

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுதாக்கல் நாளை மறுநாள் தொடங்கவுள்ள நிலையில், அரசியல் கட்சிகள், கூட்டணி மற்றும் தொகுதி உடன்பாடுகளை இறுதி செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றன.

திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக கட்சிகளுக்கான தொகுதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிஜேபி, அஇஅதிமுக ஆகிய கட்சிகள் விருப்ப மனுக்கள் பெறுவதை நிறைவு செய்த நிலையில், தங்களது கூட்டணியை இறுதி செய்வது, தொகுதி உடன்பாடு, வேட்பாளர் தேர்வு ஆகிய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

தேமுதிக சார்பில் 40 தொகுதிகளிலும் விருப்ப மனுக்கள் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 20ஆம் தேதிக்குள் விருப்ப மனுக்களை அளிக்க வேண்டும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதை ஆர்வத்துடனும், பெருமையுடனும் எதிர்நோக்கி இருப்பதாக ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த மாணவி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மாணவி 45 செகண்ட்ஸ்)

>>>><<<<

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதனையடுத்து, இதுதொடர்பான ஆலோசனைக்கூட்டங்கள் மாவட்டந்தோறும் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில், திருவாரூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் புகார்களை தெரிவிப்பதற்கான கட்டணமில்லா தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில், அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சாரம் உள்ளிட்ட அனுமதிகளை பெறுவதற்கு ஒற்றைச்சாளர முறையை பயன்படுத்துமாறு ஆட்சியர் திரு கார்த்திகேயன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேனி மாவட்டத்தில், தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி சஜீவனா தெரிவித்தார்.

>>>><<<<

பஞ்சாப் மாநிலத்தில் மொத்தம் 2 கோடியே 12 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது இடம்பெற்ற வாக்காளர்களை விட 3 லட்சத்து 78 ஆயிரம் வாக்காளர்கள் அதிகம் என்று அது கூறியுள்ளது.

பஞ்சாபில் உள்ள 13 மக்களவைத் தொகுதிகளில், அதிகபட்சமாக பாட்டியாலா தொகுதியில் 17 லட்சத்து 87 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர்.

குறைந்தபட்சமாக சங்ரூர் தொகுதியில் 15 ஆயிரத்து 50 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர்.

அம்மாநிலத்தில் 7வது கட்டமாக ஜூன் 1ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

>>>><<<<

அஹமதாபாதில் உள்ள குஜராத் பல்கலைக் கழகத்தில் நேற்று வெளிநாட்டு மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய இரண்டு பேர் கைது செய்யப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. ரந்திர் ஜெய்ஸ்வால், இச்சம்பவத்தில் இரண்டு மாணவர்கள் காயமடைந்ததாகவும், அதில் ஒருவர் சிகிச்சைக்குப் பிறகு நலமுடன் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

சீனாவின் **Sichuan** மாகாணத்தில் பரவிவரும் காட்டுத்தீயை கட்டுப்படுத்த அந்நாட்டு தீயணைப்புத்துறையினர் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீயணைப்புப்படை வீரர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தீயை அணைக்கும் பணியில் ஹெலிகாப்டர்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கூடுதல் தீயணைப்பு வீரர்களும் அப்பகுதிக்கு அனுப்பப்பட உள்ளனர்.

இந்த காட்டுத்தீ காரணமாக 11 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இந்த கிராமங்களில் வசித்து வந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

>>>><<<<

ரஷ்ய அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், ஐந்தாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் அவர், 87 சதவீத வாக்குகளை பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்ற வேட்பாளர்கள் ஐந்து சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளை மட்டுமே பெற்றதாகவும் அந்நாட்டு தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்மூலம், திரு. விளாடிமிர் புட்டின் மேலும் 6 ஆண்டுகளுக்கு ரஷ்ய அதிபராக பதவி வகிப்பார்.

>>>><<<<

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் போட்டியில், இந்தோனேஷியாவின் ஜொனாதன் கிறிஸ்டி பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-15, 21-14 என்ற செட்கணக்கில சகநாட்டு வீரர் **Ginting-**ஐ வென்றார்.

>>>><<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு அணி கோப்பையை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் அந்த அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

முதலில் பேட் செய்த தில்லி அணி, 18 புள்ளி 3 ஓவரில் 113 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Shafali Verma** 27 பந்துகளில் 44 ரன் எடுத்தார்.

பெங்களூரு அணியின் பந்து வீச்சாளர்கள் **Shreyanka Patil** நான்கு விக்கெட்டுகளையும், **Sophie Molineux** மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

114 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 19 புள்ளி 3 ஓவரில், 2 விக்கெட் இழப்புக்கு 115 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக, அந்த அணியின் **Ellyse Perry** 35 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**Sophie Deviz** 32 ரன்னும், கேப்டன் ஸ்மிருதி மந்தனா 31 ரன்னும் எடுத்தனர்.

**>>>><<<<**